# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 20.08.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 186 வது வசனத்தை ஓதினார்கள்:**

**அதன் பொருள்: ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். திருக்குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழிகாட்டக் கூடியதாகும். நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் மற்ற நாட்களில் கணக்கிட்டு நோற்கவும். அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்கு கடினத்தை(த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும் அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனை பெருமைப்படுத்துவதற் -காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்த கட்டளையை அவன் வழங்கியுள்ளான்). (2:186)**

அல்லாஹ் இந்த வசனத்தில் ரமலான் மாதத்திற்கு திருக்குர்ஆனுடன் உள்ள சிறப்பான தொடர்பை குறிப்பிட்டுள்ளான். ஏனென்றால் இது (ரமலான்) எப்படிப்பட்ட அருளுக்குரிய மாதம் என்றால் இதில் திருக்குர்ஆன் இறக்கப்பட்டது. இந்த மாதத்தில் தான் திருக்குர்ஆன் இறங்க ஆரம்பித்தது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இந்த அருளுக்குரிய மாதத்தில்தான் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அது வரை இறங்கிய திருக்குர்ஆன் வசனங்களை மீண்டும் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஓதிக் காட்டுவார்கள்.

எனவே இந்த மாதம் அல்லாஹ்வின் இந்த வேதத்தை ஓதுவதற்கும், (அதனை) புரிந்து கொள்வதற்குமுரிய மாதமாகும். இந்த வகையில் இந்த மாதம் மிக முக்கியத்துவம் வாய்ந்த மாதமாகும். வெறும் நோன்பு நோற்பதும், தொடக்கத்தில் ஓதப்பட்ட வசனம் மற்றும் அதற்கு முந்தைய பிந்தைய வசனங்களில் கூறப்பட்ட கடமைகளை முழுமை செய்வதுடன் மட்டும் இந்த மாதத்தின் முக்கியத்துவம் முடிந்து விடுவதில்லை. மாறாக, இந்த அருளுக்குரிய மாதத்தில் மகத்துவமிக்க, முழுமையான ஷரீஅத்தாகிய திருக்குர்ஆன் என்ற வேதத்தை முழுமையான மனிதரும், முழு மனித சமுதாயத்திற்காகவும் நபியாக தோன்றியவருமாகிய (ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இறக்கியுள்ளான். எனவே இந்த வகையிலும் இம்மாதத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்து விடுகிறது. முழு மனித சமுதாயத்திற்கும் தோன்றிய அந்த நபியைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

**நபியே! நீர் கூறுவீராக! மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். (7:159)**

மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் கூறுகின்றான்:

**நாம் உம்மை மனித இனம் முழுவதற்கும் நற்செய்தி வழங்குபவரும், எச்சரிக்கை செய்பவருமாகவே அனுப்பியுள்ளோம். ஆனால் மக்களுள் பெரும்பாலார் அறிவதில்லை. (34:29)**

எப்படியிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்திற்காகவும் தோன்றிய அல்லாஹ்வின் பிரியமான நபி என்பதை திருக்குர்ஆன் பல்வேறு கோணங்களில் பல்வேறு இடங்களில் கூறுகின்றது. மேலும் இனி கியாமத் வரை வேறொரு ஷரீஅத்தைக் கொண்டு வரக்கூடிய நபி வர முடியாது. எனவே திருக்குர்ஆனின் தூதுச் செய்தி ஒரு உலகளாவிய தூதுச் செய்தியாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்திற்கும் கியாமத் வரையிலான நபி ஆவார்கள். திருக்குர்ஆன்தான்

இறுதி வேதம் மற்றும் முழு மனித இனத்திற்குமான வேதம் என்ற வாதத்தை செய்திருக்கின்றது. இந்த சிறப்பு திருக்குர்ஆனுக்கு தான் உள்ளது. எனவே இதன் மகத்துவம் தெள்ளத் தெளிவாகி, அதிகரித்து விடுகின்றது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நாம், ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அனைத்துலகங்களின் அருட்கொடை) மற்றும் காஃபத்தன் லின்னாஸ் (முழு மனித இனத்திற்கும்) ஆகிய நபியின் வாரிசுகளாவோம். அவர்கள் மனித இனம் முழுவதற்கும் ரஸூலாக தோன்றியுள்ளார்கள். அவருடைய வேதத்தின் பாதுகாவலன் இறைவன் ஆவான். மேலும் அதில் (திருக்குர்ஆனில்) அதிகமான இறை ஞானங்கள் உள்ளன.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அனைத்துலகங்களுக்கும் அருட்கொடை) என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே அவர்கள் எப்படிப்பட்ட மகத்துவமிக்க நபி என்றால் அவர்களிடமிருந்துதான் மனித இனத்திற்கு ரஹ்மத்தின் ஊற்றுகள் வெளிப்படுகின்றன. மேலும் அன்னாரின் மீது இறங்கிய வேதத்தின் போதனையின்படி உண்மையான பொருளில் செயல்படக் கூடியவர்கள் தன்னுடைய மகத்துவமிக்க ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னத்தின் வழி நடந்து உலகிற்கு ரஹ்மத்தாக திகழ்கின்றார்கள். திருக்குர்ஆனின் போதனைகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உலகில் ரஹ்மத்தை (கருணையினை) பங்கீடு செய்து கொடுக்க வந்தார்களே தவிர, அமைதியை விரும்புகின்ற குடிமக்களின் அமைதியினை பறிக்கும் போதனைகளை வழங்கவும் அப்பாவி மக்களின் உயிர்களோடு கொடூரமாக விளையாடுவதற்கும் வரவில்லை. அந்தோ! தீவிரவாதத்தை விரும்புகின்ற இன்றைய முல்லாக்களுக்கும், பெயர் தாங்கிய ஆலிம்களுக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டுமே!

ஆக, எந்த வசனத்தின் ஒளியில் திருக்குர்ஆன் தொடர்பாக கூறப்பட்டு வருகின்றதோ அந்த வசனத்தின் அடுத்த பகுதியில் அல்லாஹ் கூறுகின்றான்.

இந்த குர்ஆனில் முழு உலக மனித இனத்திற்கும் ஹிதாயத் (நேர்வழி) உள்ளது. இதில் தெளிவான அடையாளங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதில் உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவதற்குரிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. எனவே, ரமலான் என்று அழைக்கப்படக்கூடிய இம்மாதத்தில், நோன்பு நோற்று அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்யப்படும் இம்மாதத்தில், தனது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த நம்பிக்கையாளர்கள் முயற்சி மேற்கொள்ளும் இம்மாதத்தில், தெளிவான போதனைகள் மற்றும் நேர்வழி நிறைந்த முழுமையான வேதமாகிய திருக்குர்ஆனை கண்முன் நிறுத்தி அதனை சிந்தித்து பார்ப்பது நம்பிக்கையாளர்களின் கடமையாகும். இந்த திருக்குர்ஆன் உங்களின் வழிகாட்டியாகும். அதனை ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் அதன் கட்டளைகளைப் பற்றி சிந்தித்துப் பார்த்து உங்களின் நேர்வழிக்கான ஏற்பாட்டினை செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

**இறையச்சமுடையவர்களுக்கு இது நேர்வழியாகும். (2:2)**

எல்லா மனித இனத்திற்கும் இது ஹிதாயத் (நேர்வழி) ஆகும் என்றும் அல்லாஹ் கூறுகின்றான். நேர்வழியின் படித்தரங்கள் பல்வேறு வகைப்பட்டதாகும். இறையச்சம் உடையவருக்கும் நேர்வழியாகும். ஒருமுறை நம்பிக்கை கொண்டு அல்லது தக்வாவை மேற்கொள்வதோடு ஹிதாயத் முழுமைபெற்று விடுவதில்லை. மாறாக ஹிதாயத் என்பது ஒரு தொடராகும். அதாவது எவர்கள் இறையச்சமுடையவர்கள் என்று வாதம் செய்கிறார்களோ, எவர்கள் எல்லா விதமான அன்பு மற்றும் அச்சத்தை விட அல்லாஹ்வின் மீதான அச்சமும் பயமும் மேலோங்கி இருப்பதாக வாதம் செய்கின்றார்களோ, அவர்களின் வாதம் உண்மை என்றால் பின்னர் இப்போதனைகளின் எல்லா நுட்பங்களின்படியும் செயல்படுவது அவசியமாகும். இல்லையென்றால் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

எவர்கள் சிந்திப்பதில்லையோ தக்வாவின் வழிநடப்பதில்லையோ, அவர்கள் நோன்பு நோற்பது நோன்பாளிகள் எனறு அழைக்கப்படுவதற்கேயாகும். அவர்கள் இரவில் கண்விழிப்பது வெறும் கண்விழிப்பதே ஆகும். மேலும் அவர்களின் நோன்பு என்பது வெறும் பசி மற்றும் தாகத்தின் பெயராகும்.

எனவே திருக்குர்ஆனிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்போதும், அல்லாஹ் அருளிய அந்த போதனைகளின்படி செயல்படுவதற்கு முயற்சிகள் செய்யப்படும்போது தான் நோன்பும் பொருளுடையதாக இருக்கும். ஆக இந்த நாட்களில் மனதை தூய்மைப்படுத்துவதில் அழுத்தம் கொடுப்பதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளான். இதுவும் திருக்குர்ஆனிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. ஒரு நம்பிக்கையாளரிடத்தில் இந்நிலை இருக்கும் போதுதான் அவரால் இதன் அழகிய போதனைகளை உலகின் முன்னால் வைக்க முடியும். அப்போதுதான் நம்மால் உலகத்திற்கு கூற முடியும். நீங்கள் எந்த வழியில் செல்கின்றீர்களோ அது மிகவும் அபாயகரமான வழியாகும். அது அழிவிற்குரிய வழியாகும். அது இம்மை மற்றும் மறுமையின் அழிவிற்குரிய வழியாகும். நீங்கள் இம்மை மற்றும் மறுமையில் வெற்றி பெற விரும்பினால் வாருங்கள்; உங்களுக்கு நேர்வழியின் பாதைகளைக் காட்டித் தருகிறோம். ஹுதல்லின்னாஸ் (மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாகும்) என்பது திருக்குர்ஆனின் வெறும் வாதம் மட்டுமல்ல. மாறாக நீங்கள் அதன் போதனைகளின்படி செயல்பட்டால் இவ்வுலகிலேயே உங்களுக்கு நேர்வழியின் அடையாளங்கள் தென்படும். நான் ஏற்கனவே கூறியது போன்று முதலில் ஒரு முஸ்லிம் அதன்படி செயல்பட வேண்டும். திருக்குர்ஆன் போதனைக்கேற்ப அமல்களை உலகின் முன் முஸ்லிம்கள் வைக்க வேண்டும். அப்போதுதான் உலகம் (உண்மையை) கண்டு கொள்ளும். இன்று முஸ்லிம்களின் செயல்கள்தான் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு திருக்குர்ஆனின் மீதும் அதன் போதனைகளின் மீதும் ஆட்சேபனை செய்வதற்கு வாய்ப்பளிக்கின்றன. இது மிகப்பெரிய துர்பாக்கியமாகும்.

இன்றைய நாட்களில் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய போதனைகளை இழிவுபடுத்த அமெரிக்காவில் உள்ள ஒரு Church –லிருந்து இழிவான முயற்சிகள் நடைபெற்று வருகின்றது. அதில் ஒன்று, செப்டம்பர் 11. அன்று திருக்குர்ஆனை எரிப்பதற்கும் அவர்கள் திட்டம் தீட்டியுள்ளார்கள். இதனை மீடியாக்கள் எல்லா இடங்களிலும் அறிவித்துள்ளன. அந்த Church திருக்குர்ஆனின் மீது செய்திருக்கின்ற பத்து ஆட்சேபனைகளும் மிகவும் வீணானதும் மற்றும் பொருளற்றதுமாகும். ஆட்சேபனை செய்வதாக இருந்தால் நாமும் பைபிளின் மீது பல ஆட்சேபனைகளை செய்ய முடியும். ஆனால் குழப்பம் விளைவிப்பது நமது பணியல்ல. ஆனால் அறிவுப்பூர்வமான தர்க்கம் செய்ய, ஆட்சேபனைக்குப் பதிலாக ஆட்சேபனை செய்வதற்கு அனைவருக்கும் உரிமையுள்ளது. எனவே அறிவுரீதியான தர்க்கம் நாம் செய்கின்றோம். ஆனால் இவ்விஷயங்களுக்காக பைபிள் ஏகத்துவத்தை பல இடங்களில் நிராகரிக்கின்றது என்பதற்காக பைபிளை எரிக்கின்ற பணிகளில் ஈடுபடுவதற்கு எந்தவொரு முஸ்லிமிற்கும் உரிமையில்லை. திருக்குர்ஆன் ஆரம்பம் முதல் இறுதி வரை ஏகத்துவத்தின் போதனையைத்தான் வழங்குகின்றது. மேலும் இந்த பணியைத்தான் செய்வது வரும். எல்லா நபிமார்களும் இந்த நோக்கத்திற்காககத்தான் வருகின்றார்கள். மேலும் எல்லா வேதங்களும் ஏகத்துவத்திற்கான போதனையை வழங்கியுள்ளது. ஏகத்துவத்தை தவிர்த்து எந்தவொரு மார்க்கத்தின் அடித்தளமும் அமைய முடியாது என்பது உண்மையாகும். இன்னும் சொல்லப்போனல், இக்காலத்தில் அல்லாஹ் எந்த ஜரிவுல்லாஹ்வை (அல்லாஹ்வின் பயில்வானை) உலகில் அனுப்பியுள்ளானோ அவர் அந்த போதனையை எந்த அளவுக்கு மேன்மைப்படுத்திக் காட்டினார் என்றால் மனிதனை இறைவனாக்கிக் கொண்டவர்கள், மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களிடம் மார்க்க வாதம் செய்யாதீர்கள் என்று அறிவித்து விட்டார்கள். இன்றைய கிறிஸ்தவத்தவத்தின் அடித்தளமே திரித்துவம் (பிதா சுதன் பரிசுத்த ஆவி) அவர்கள் பைபிளிலிருந்தே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கூற்றின் மூலமாக அவர் இறைமகன் அல்ல என்பதையும் யாரும் இறை மகனாக இருக்க முடியாது என்பதையும் நிரூபித்துக் காட்டினார்கள். திருக்குர்ஆனிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த Church –ன் குற்றச்சாட்டுகளில் முதல் குற்றச்சாட்டே திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை)

அவர்களை இறைமகனாக ஏற்றுக் கொள்வதில்லை என்பதாகும். இதே ஆட்சேபனையை மேலும் முன்னெடுத்துச் சென்று இரட்சிப்பு என்பது மனிதனின் தனது செயலின் மூலமாகவே தவிர, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணிப்பதன் மூலமாக அல்ல என்ற திருக்குர்ஆன் கருத்தின் மீது ஆட்சேபனை செய்துள்ளார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் இவ்வாறுதான் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் அவரின் பெயரால் அவருடைய போதனைகள் பிற்காலத்தில் சிதைக்கப்பட்டன என்பதை இந்த அறிவின் குருடர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆக ஒரு மனிதன் தோல்வியை தழுவும் போது, அவனிடத்தில் (தனது வாதத்திற்கு) எவ்வித ஆதாரமும் இல்லாதபோது வன்முறையில் இறங்குவதை தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் போய் விடும். இதைத்தான் தற்போது Dove out reach centre என்ற பெயர் கொண்ட Church செய்து வருகின்றது. பைபிளில் ஓரிடத்தில் அல்ல, பல இடங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பைபிளில் கூறுகின்றார்கள்:**

இஸ்ரவேலே கேள். நம் ஆண்டவராகிய நம் கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்பது முதன்மையான கட்டளை. (மாற்கு 12: 29,30)

இதனை தவிர பைபிளில் பல்வேறு இடங்களில் மஸீஹின் ஏகத்துவ கொள்கைக்கான ஆதாரம் உள்ளது. பைபிளே ஏகத்துவ வாதம் செய்கின்றது. இந்த ஆதாரங்கள் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் கூற்றின் உண்மைத்துவத்தையும், மேன்மையையும் நிரூபணம் செய்து காட்டினார்கள். மேலும் கிறிஸ்தவர்களின் எல்லா ஆதாரங்களையும் ரத்து செய்து காட்டினார்கள். மேலும் இன்று வரை இந்தப் பணியை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வருகின்றது. உண்மையைப் பரப்புங்கள். உலகத்திற்கு கூறுங்கள். நிச்சயமாக நேர்வழி மற்றும் வழிகேட்டின் வித்தியாசம் தெளிவாகி விட்டது. ஆனால் இந்த வேறுபாட்டினை எடுத்துக் கூறுவதற்கும், ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் எந்த நிர்பந்தத்திற்கும் அவசியமில்லை. எவர் விரும்புவாரோ அவர் ஏற்றுக் கொள்ளட்டும். எவர் விரும்புவாரோ அவர் நிராகரித்துக் கொள்ளட்டும் என்பதுதான் திருக்குர்ஆனின் அழகிய போதனையாகும்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: நபியே! திருக்குர்ஆன் வடிவில் இறங்கியுள்ள வேதத்தை தூதுச் செய்தியை மக்கள் வரை எட்ட வைப்பதே உமது பணியாகும். ஹிதாயத் வழங்குவது அல்லாஹ்வின் பணியாகும். இப்படிப்பட்ட அழகிய போதனையை இவர்கள் எந்த போதனையின் ஒளியின் எரிக்க விரும்புகின்றார்கள்? தீவிரவாதம் மற்றும் குழப்பத்திற்குரிய போதனைகளை இந்த Church வழங்குகின்றதா அல்லது முஸ்லிம்களா? இந்த Church பைபிள் கூறுகின்ற போதனைகளின்படி செயல்படவில்லையே! ஒருவர் உங்களின் ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டி விடுங்கள் என்று தான் பைபிள் கூறுகிறது. மார்க்கப் பகைமைகளை உருவாக்குங்கள் என்று பைபிள் கூறவில்லை. பல கிறிஸ்தவ சபைகள் கூட மேற்குறிப்பிட்ட சபையின் கொடூரமான செயல்திட்டத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளன. நாங்கள் அதில் பங்குபெறமாட்டோம் என்று கூறி கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஒவ்வொரு அறிவுடைய மனிதர் மற்றும் அமைதியை விரும்பக் கூடியவரின் நடவடிக்கையும் இவ்வாறுதான் இருக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இந்த Dove Church -ன் இழிவான முயற்சியை தடுக்க முயற்சி செய்து வருகின்றது. அமெரிக்காவின் ஜமாஅத்திற்கு திட்டம் வகுத்து செயல்படுங்கள் என்று நான் கூறினேன். மேலும் மற்ற இடங்களில் உள்ள ஜமாஅத்துகளும் அவ்வாறே செயல்பட வேண்டும். இவர்கள் மேற்கொள்கின்ற வழிமுறை உலகில் குழப்பத்தை விளைவிக்கும் வழியாகும். இதன் மூலமாக அன்பிற்குப் பதிலாக பகைமை மற்றும் வெறுப்பின் சுவர்கள் எழுப்பப்படும். ஹஸ்ரத் மர்யம் (அலை) மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு திருக்குர்ஆன் வழங்கியுள்ள கண்ணியம் இவர்களுக்கு தென்படுவதில்லை. திருக்குர்ஆன் எல்லா நபிமார்களையும் கண்ணியப்படுத்துகின்றது. எப்படியிருப்பினும், நான் கூறியது போன்று இவர்களின் இந்த

செயல்கள் வெறுப்பின் சுவர்களை எழுப்பும். எந்த முஸ்லிம்கள் துரதிர்ஷ்டவசமாக காலத்தின் இமாமை நிராகரித்து கட்டுப்பாடற்று உள்ளார்களோ அல்லது எவர்களின் கட்டுப்பாடு துரதிர்ஷ்டவசமாக சுயநலவாதிகளின் கைகளில் உள்ளதோ அப்படிப்பட்ட முஸ்லிம்கள் தவறான எதிர்நடவடிக்கையில் ஈடுபடக் கூடும்.

இன்று உலகத்திற்கு அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் தேவை உள்ளது. போர்களின் அழிவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் அவசியம் உள்ளது. இறை அன்பினை ஈர்ப்பதற்கான அவசியம் உள்ளது. அப்போதுதான் அழிவிலிருந்து தப்பிக்க முடியும். இந்த தேவைகளைப் பெற்றிட கிறிஸ்தவர்களும் தமது நிலைமைகளை மாற்றிக் கொள்வது அவசியமாகும். மேலும் முஸ்லிம்களும் பொருத்தமான எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்துவது அவசியமாகும். ஆதாரங்கள் மூலமாக வாதங்கள் செய்யுங்கள். அறிவுரீதியான தர்க்கம் செய்யுங்கள். ஆனால் ஒருவர் மற்றவருடைய மார்க்க உணர்வுகளை கருத்தில் கொள்ளுங்கள். இன்று முஸ்லிம்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் உண்மையாக நேசிப்பதாக வாதம் செய்கின்றார்கள் என்றால் அவர்கள் தமது வழிகாட்டலுக்காக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றியுள்ள வழிகாட்டியை (இமாமை) அல்லாஹ்வின் கட்டளையைப் புரிந்தவாறு தேட வேண்டும்.

இது ரமலான் மாதமாகும். இதனைப் பற்றி அல்லாஹ் இதில் திருக்குர்ஆன் இறங்கியுள்ளது என்று கூறுகிறான். மேலும் எல்லா மனித இனத்திற்கும் அது ஹிதாயத் (வழிகாட்டுதல்) ஆகும். எனவே திருக்குர்ஆன் நேர்வழிக்காக வகுத்த வழிமுறைகளை நீங்கள் நேர்வழிக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஹிதாயத்தின் அளவுகோலாக எதனை திருக்குர்ஆன் கூறியுள்ளதோ அதனை மேற்கொள்ளுங்கள். ஹிதாயத் வழங்குகின்றவனை அடைவதற்கு தூய உள்ளத்துடன் துஆ செய்வது அவசியமாகும்.

அல்லாஹ் எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவானாக என்ற துஆவினை நமக்கு கற்றுத் தந்துள்ளான். தூய மனதுடன் இந்த துஆவை செய்தால் அல்லாஹ் கண்டிப்பாக வழிகாட்டி விடுவான். இந்த துஆவின் மூலம் முஸ்லிம் அல்லாதவருக்கு கூட வழிகாட்டி விடுகின்றான். அப்படியிருக்கும்போது முஸ்லிம்களுக்கு கண்டிப்பாக (இந்த துஆவின் மூலம்) வழிகாட்டுவான். அந்தோ! நம்முடைய முஸ்லிம் சகோதரர்கள் நம்முடைய வேதனை மிகுந்த தூதுச் செய்தி மற்றும் உணர்வுகளைப் புரிந்து அதன்படி செயல்பட வேண்டுமே! மேலும் தமது இம்மை மற்றும் மறுமையை சரிசெய்து கொள்ள வேண்டுமே!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன் உண்மையான பரக்கத்துகளின் பிறப்பிடம் மற்றும் ஈடேற்றத்திற்கான உண்மையான வழிமுறையாகும். திருக்குர்ஆனின்படி செயல்படாதவர்களின் ஒரு கூட்டம் எப்படிப்பட்டதென்றால் அதற்கு திருக்குர்ஆன் மீது நம்பிக்கையே இல்லை. மேலும் அதனை இறைவேதம் என்றும் கருதுவதில்லை. இவர்கள் (நேர்வழியிலிருந்து) வெகு தொலைவில் கிடக்கின்றனர்.

ஆனால் எவர்கள் இறைவேதம் என்றும், (ஆன்மீக நோய்களை) குணமளிக்கும் மருந்து என்றும் திருக்குர்ஆனின் மீது ஈமான் கொண்டுள்ளார்களோ அவர்கள் அதன்படி அமல் செய்யவில்லையென்றால் அது எவ்வளவு பெரிய ஆச்சரியத்திற்கும், வேதனைக்கும் உரிய விஷயமாகும். அவர்களில் பெரும்பாலார் தமது வாழ்நாள் முழுவதிலும் அதனை படிக்கக் கூட இல்லை. எனவே இறை வேதத்திலிருந்து இவ்வாறு கவனமற்ற ஒரு மனிதரின் உதாரணம் இதுவாகும். ஒருவருக்கு ஒரு நீரூற்றைப் பற்றி அது மிகவும் தூயது மற்றும் இனிப்பானது. அதன் தண்ணீர் மிகவும் சுவையானது மற்றும் குளிர்ந்தது என்றும் தெரியும். அதன் தண்ணீர் பல்வேறு நோய்களின் நிவாரணி என்றும் அவருக்கு தெரியும். இதில் உறுதியான அறிவு அவர் பெற்ற பின்னரும் தாகமுடையவராக இருந்து கொண்டும், பல்வேறு நோய்களுக்கு ஆளாகியிருந்த போதிலும், அவர் அந்த நீரூற்றின் பக்கம் செல்லவில்லை என்றால் அது அவரின் எவ்வளவு துர்பாக்கிய செயல் மற்றும்

அறிவீனமாகும். அவர் அந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்தியிருக்க வேண்டும். அந்த நீரை அருந்தி தாகத்தை தணித்து, இன்பமடைந்து குணமளிக்கும் அந்த நீரூற்றிலிருந்து பயன் அடைந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அறிவுபடைத்திருந்தும் எவ்வாறு ஞானம் பெறாதவர் அதிலிருந்து விலகி தொலைவில் இருக்கின்றாரோ அதேபோன்று அவரும் தொலைவிலேயே இருக்கின்றார். மரணம் வந்து அவரை அழித்து விடும் வரை அவர் தொலைவிலேயே இருக்கின்றார். அந்த மனிதனின் நிலை மிகவும் படிப்பினைக்கு உரியதாகும். இன்று முஸ்லிம்களின் நிலையும் இவ்வாறே உள்ளது. எல்லா முன்னேற்றம் மற்றும் வெற்றியின் ரகசியம் இந்த திருக்குர்ஆனில் தான் உள்ளது. அதன்படி செயல்பட வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் செயல்படுவதில்லை. திருக்குர்ஆனை (அதன் போதனைகளை) பொருட்படுத்துவதுகூட கிடையாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க ஒரு மனிதர் மிகவும் அனுதாபம் மற்றும் நல்லெண்ணத்துடன், அதுவும் என்னுடைய அனுதாபம் மற்றும் நல்லெண்ணத்துடன் அழைக்கின்றபோது அவரை பொய்யர் என்றும், தஜ்ஜால் என்றும் கூறப்படுகின்றது. இதை விட பரிதாபகரமான நிலை இந்த சமுதாயத்திற்கு வேறு என்ன இருக்க முடியும்.

இன்றும் அதே நிலைதான். திருக்குர்ஆனை சிந்தித்துப் பார்ப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். பெரும்பான்மையினர் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் கூட கவனம் செலுத்துவதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை திருக்குர்ஆன் காத்தமுன்னபிய்யீன் என்று கூறுகின்றது. ஆனால் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் தன்னை நபி என்று வாதிடுகின்றார் என்று பெயர் தாங்கிய ஆலிம்கள் கூறி தூண்டி விடுவதன் விளைவாக முஸ்லிம்கள் அந்த ஆலிம்களின் பின்னால் செல்கின்றனர். அந்தோ! அவர்கள் சிந்தித்து அன்னார் என்ன வாதம் செய்துள்ளார்கள் என்று நம்மிடம் கேட்க வேண்டுமே! உண்மையைத் தேட வேண்டுமே! அவர்களிடத்தில் ஆதாரங்கள் இல்லை. எனவே குறிப்பாக பாகிஸ்தானிலும் உலகின் சில முஸ்லிம் நாடுகளிலும் மற்ற இடங்களிலும் ஜமாஅத்திற்கெதிராக தடை விதித்துள்ளனர். அஹ்மதிகளிடம் பேசுவது மற்றும் ஸலாம் கூறுவது கூட குஃப்ர் – நிராகரிப்பு ஆகும் என்று முஸ்லிம்களிடம் கூறப்படுகின்றது. எந்த தீவிரவாதத்தை கிறிஸ்தவர்கள் காட்டுகின்றார்களோ அதே தீவிரவாதத்தைத்தான் அஹ்மதிகளுக்கு எதிராக முஸ்லிம்களும் வெளிப்படுத்துகின்றனர். இன்னும் உண்மை என்னவென்றால், ஒரு மிகப்பெரிய முஸ்லிம்களின் கூட்டம் தீவிரவாதத்தில் ஈடுபடுவதைப் பார்த்து தான் கிறிஸ்தவர்களுக்கும் அதற்கான தைரியம் வந்துள்ளது. ஆக இதுதான் இன்றைய இந்த முஸ்லிம்களின் நிலை! முஸ்லிம்களுக்கு தங்கள் மீது இந்த அளவுக்கு கூட நம்பிக்கையில்லை. அஹ்மதிகள் தவறிழைக்கின்றனர் என்றால் அந்த தவறை சுட்டிக் காட்ட வேண்டும்! அஹ்மதிகளிடம் பேசினால் நம்முடைய ஈமான் பலவீனமாகி விடும். இஸ்லாத்தை விட்டு விலகி விடுவோம் என்று பயப்படுகின்றீர்களா? இந்த அளவுக்கு உங்களின் ஈமான் பலவீனமாக உள்ளதா? எப்படியிருப்பினும், இந்த சாதாரண முஸ்லிம்கள், தங்களுடைய உலமாக்களின் பேச்சை செவிமடுத்து அவர்களின் பின்னால் சென்று தமது இம்மை மற்றும் மறுமையை நாசமாக்கிக் கொள்கின்றனர்.

இந்நிலையில் அஹ்மதிகளாகிய நாம் நமது கடமைகளைநிறைவேற்றுவது அவசியமாகும். திருக்குர்ஆனில் கூறப்படுகின்ற நேர்வழியின் செயல்வடிவமாக நாம் திகழ வேண்டும். அல்லாஹ் ரமலான் மாதத்தை காணும் பாக்கியத்தை நமக்கு வழங்கி இருக்கின்றான். எனவே இம்மாதத்தில் நாம் ஆன்மீக நிலைகளை சரிசெய்வதற்கும, திருக்குர்ஆனின்படி செயல்படுவதற்கும் சிந்திப்பதற்கும் நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்; முழுமையாக பயனடைய வேண்டும். நாம் திருக்குர்ஆனை தொடர்ந்து தினமும் ஓதும்போதும், அதனை சிந்திக்கும்போதும் அதன் கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யும் போதும் நம்மால் முழுமையான பலனை இம்மாதத்தில் பெற முடியும். அல்லாஹ் அதில் சில கட்டளைகளை சில நன்மைகளை செய்யும்படி கட்டளையிட்டுள்ளான். சில தீமைகளிலிருந்து விலகும்படி கூறியிருக்கின்றான்.

இதன் மூலமாக ஹிதாயத்தின் பாதைகள் காணக்கிடைக்கும். மேலும் அதன் மூலமாக உங்களின் உண்மையான இலக்கை அடைய உதவும் பாதைகளில் உங்களால் செல்ல முடியும். ஒரு நம்பிக்கையாளரின் உண்மையான இலக்கு அல்லாஹ்வின் திருப்தியைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? ஹிதாயத்தின் பாதைகளைப் பெறுவதற்கு இறைவன் வைத்துள்ள முதல் வழிமுறை மறைவானவற்றின் மீதான நம்பிக்கையாகும். அது ஒன்றும் சாதாரண விஷயம் அல்ல. இந்த மறைவானவற்றின் மீதான நம்பிக்கை என்பதுதான் ஈமானில் முன்னேற்றம் காண்பதற்கு காரணமாக அமைகின்றது. மேலும் ஈமானில் முன்னேற்றம் என்பது இறைவனை அடையக்கூடிய ஹிதாயத்தின் பாதைகளின் பக்கம் நம்மை கொண்டு செல்கிறது. அது இறைவனின் போதனைகளை புரிந்து கொள்வதற்கான வழிகளாகும். இறைத் தொடர்பில் முன்னேறுவதற்குரிய வழியாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறையச்சமுடையவர் தமது முதல் படித்தரத்தில் இறை சந்திப்பும், இறை அறிவிப்புகள் மற்றும் ஆன்மீக காட்சிகள் போன்ற உயர்நிலைகள் கிடைக்கப் பெறுவதில்லை. எனவே அவரின் முதன்மையான தேவை மறைவானவற்றின் மீதான நம்பிக்கையே ஆகும். மேலும் அவருடைய ஈமானின் நிலை தற்காலிகமானதாக உள்ளது. ஏனென்றால் வலுவான காரணிகளைக் கண்டுதான் அவர் அல்லாஹ்வின் இருப்பின் மீது ஈமான் கொள்கின்றார். அது சந்தேகம் மற்றும் நம்பிக்கைக்கு இடைப்பட்டதாக அந்நிலை உள்ளது. இறையச்சமுடையவர்கள் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கின்றார்கள். அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்கின்றனர் என்று அல்லாஹ் கூறுவதற்கேற்ப அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். இது மிகவும் கீழான நிலை அல்லது குறைந்த படித்தரம் ஆகும் என்று நீங்கள் கருத வேண்டாம். இறையச்சமுடையவரின் இந்த முதல் நிலை அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் மதிப்புவாய்ந்ததாகும்.

ஹதீஸில் வருகின்றது: யாருடைய ஈமான் மிக அதிகமானது? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் கேட்டார்கள். ஹுஸூர் உங்களுடையது தான் என சஹாபாக்கள் பதில் கூறினர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்னுடையது எவ்வாறிருக்க முடியும். நான் தான் தினமும் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களை பார்க்கின்றேன். அல்லாஹ்வின் அடையாளங்களை தினமும் பார்த்து வருகின்றேனே என்று கூறினார்கள். அப்படியென்றால் எங்களுடைய ஈமானா? என்று சஹாபாக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களுடைய ஈமான் (பெரியதாக) எப்படி இருக்க முடியும்? நீங்களும் தான் தினமும் அல்லாஹ்வின் அடையாளங்களைப் பார்க்கின்றீர்களே! என்று கூறினார்கள். இறுதியில், **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எனக்கு பின் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற மக்களின் ஈமான் ஆச்சரியத்திற்குரியதாகும். ஏனென்றால் நீங்கள் பார்ப்பதைப் போன்று அவர்கள் எந்தவொரு அடையாளத்தையும் பார்ப்பதில்லை. அவ்வாறிருந்தும் அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வர். சுருக்கமாக, முத்தகீ (இறையச்சமுடையவர்) தொடக்கநிலையில் மரணித்து விட்டால் கூட அவரை அல்லாஹ் அந்த (உயர்ந்த) நிலையில் சேர்த்து விடுகின்றான். அடையாளங்களை பார்ப்பதன் மூலமாக கிடைக்கின்ற இன்பம் மற்றும் அருளிலிருந்து அவர் கொஞ்சம் கூட பங்கு பெற்றிருப்பதில்லை. அவ்வாறிருந்தும் அவர் எப்படிப்பட்ட ஆற்றலை வெளிப்படுத்துகின்றார் என்றால் அவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை மட்டும் கொள்வதில்லை. மாறாக தமது நம்பிக்கையை அமல் செய்து நிரூபணம் செய்கின்றார். அதாவது தொழுகையை நிலைநாட்டுதல் என்ற அமலை அவர் செய்கின்றார்.

தக்வாவின் இந்த நிலையில் தொழுகையில் தீய எண்ணங்களும் தோன்றும். பலவகையான சந்தேகங்களும், ஐயங்களும் தோன்றி கவனத்தைச் சிதறடிக்கச் செய்யும். அவ்வாறிருந்தும் அவர்கள்

தொழுகையை கைவிட்டுவிடுவதில்லை. நம்பிக்கை இழப்பதில்லை. சோர்வடைவதில்லை. சில மக்கள் சில நாட்கள் மட்டும் தொழுவார்கள். தீய எண்ணங்களும், தவறான சிந்தனைகளும் உள்ளத்தில் தோன்றியதும், தொழுகையை விட்டு விட்டு சோர்ந்து அமர்ந்து விடுகின்றார்கள். ஆனால் இறையச்சம் உடையவர் தமது தைரியத்தை இழப்பதில்லை. அவர் தொழுகையை நிலைநிறுத்துவார். தொழுகை விழுந்து விடும். ஆனால் அவர் மீண்டும் மீண்டும் தொழுகையை நிலைநிறுத்துவார். தக்வாவின் நிலையில் இரண்டு காலகட்டங்கள் ஒரு இறையச்சம் உடையவர் மீது வருகின்றன. ஒன்று, இப்திலா என்ற காலகட்டமாகும். மற்றொன்று இஸ்திஃபா என்ற காலகட்டமாகும். நீங்கள் உங்களின் ஆற்றல்களை நிலைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், யார் அல்லாஹ்வின் மீது நல்லடியாரைப் போன்று நம்பிக்கை கொள்கின்றார் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் தான் இப்திலா என்ற (சோதனையான) காலகட்டம் வருகின்றது. எனவே சில நேரத்தில் சந்தேகங்களும் ஐயப்பாடுகளும் தோன்றி அவரை நிம்மதியிழக்கச் செய்யும். சில நேரத்தில் இறை இருப்பின் மீதே சந்தேகங்களும், ஆட்சேபனைகளும் எழ ஆரம்பித்து விடுகின்றன. உண்மையான நம்பிக்கையாளர் இந்நிலையில் அச்சப்படவும் பயப்படவும் கூடாது. மாறாக தமது பாதத்தை முன்னோக்கி வைக்க வேண்டும். அல்லாஹ்வின் இருப்பினை நிராகரிக்கச் செய்யும் வரை ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தினை நிராகரிக்கும் வரை ஷய்த்தான் திருப்தியடைவதில்லை. இது ஷய்த்தானின் பணியாகும். அவன் பல்வேறு தீய எண்ணங்களை ஏற்படுத்துகின்றான். இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்கள் இந்த தீய எண்ணங்களுக்கு இரையாகி அழிந்து விடுகின்றனர்.

அதாவது உள்ளத்தில் தோன்றிய இந்த தீய, தவறான எண்ணத்தை இப்போது செயல்படுத்துவோம். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர்.

ஒரு மூச்சை விட்ட பிறகு அடுத்த மூச்சை விடுவானா? மாட்டானா? என்று கூட மனிதனுக்கு தெரியாது. அவ்வாறிருந்தபோதிலும் ஷய்த்தான் பெரிய பெரிய பொய்யான ஆசைகளைக் காட்டி மனிதனை (பாவம் செய்வதில்) தைரியசாலியாக ஆக்குகிறான். அங்கு இறையச்சமுடையவருக்கு ஷய்த்தான் எல்லா தீய எண்ணங்களையும் எதிர்கொள்ளும் பொருட்டு தைரியம் வழங்கப்படுகின்றது. எனவே தான் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள் என்று கூறியிருக்கின்றான். இந்நிலையில் அவர்கள் தோல்வியடைவதுமில்லை. சோர்வடைவதுமில்லை. தொடக்க நிலையில் ஆர்வமும், இன்பமும் கிடைக்காததின் காரணமாக அவர்கள் நம்பிக்கையிழந்து விடமாட்டார்கள். இந்த ஆர்வமற்ற, இன்பமற்ற நிலையிலும் கூட அவர்கள் தொழுது வருவார்கள். எதுவரை என்றால் அவர்களின் எல்லா சந்தேகங்களும் தீய எண்ணங்களும் விலகிவிடும். ஷய்த்தான் தோல்வியை தழுவி விடுவான். நம்பிக்கையாளர் வெற்றி பெற்று விடுவார். சுருக்கமாக, இறையச்சமுடையவரின் இந்த காலகட்டம் சோம்பலின் காலகட்டமாக இருக்காது. மாறாக, இது மைதானத்தில் நிலைநின்று தீய எண்ணங்களுக்கெதிராக போராடும் காலகட்டமாக அமைந்துள்ளது.

எனவே இந்நாட்களில் எல்லாருக்கும் தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல்களும் நிறைந்திருக்கின்றன. ஷய்த்தானிற்கெதிரான போராட்டத்தில் ஒரு ஆற்றலை வெளிப்படுத்தி விட வேண்டும். ஷய்த்தானுக்கெதிராக போராட உறுதியான தொடர்பு அதிகரித்து வரும் போதுதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கின்ற ஹிதாயத்தின் (நேர்வழியின்) பக்கம் வழிகாட்டுதல் கிடைக்கும். தெளிவான அடையாளங்களை தன்னகத்தே கொண்ட ஹிதாயத்தின பாதைகள் தென்படும். இங்கு இவ்விஷயத்தையும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் செய்துள்ள அனைத்து முன்னறிவிப்புகளின் மீதும் நம்பிக்கை கொள்வது மறைவானவற்றின் மீதான நம்பிக்கையின் தேட்டமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று மறைவானவற்றின் மீதான நம்பிக்கை செயல்ரீதியான சான்றாக தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தி நிலைநிறுத்தி வந்தால் மேலும் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து தப்பிக்க துஆ செய்து வந்தால், அங்கு அல்லாஹ்வே எங்களின் மறைவானவற்றின் மீதான நம்பிக்கையை அடையாளங்கள் வாயிலாக மேலும் உறுதிப்படுத்துவாயாக என்ற

துஆவும் செய்யப்படும். ஒரு நம்பிக்கையாளர் இவ்வாறு துஆ செய்வது அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கையின் தேட்டமாகும். இறைவா! முந்தைய காலங்களில் எவ்வாறு உன்னுடைய நபிமார்கள் சீர்திருத்தத்திற்காக தோன்றினார்களோ அவ்வாறே இப்போதும் தோன்ற வேண்டும். ஏனென்றால் இறைவன் புறமிருந்து ஒருவர் வரவேண்டும் என்பது இக்காலத்தின் தேட்டமாகும். மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் அவரை எழுப்புவான் (62:4) என்பது திருக்குர்ஆன் முன்னறிவிப்பு செய்துள்ளது.

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எவர்கள் அடையாளங்களை காணவில்லையோ அவர்களின் ஈமான் தான் சிறந்தது என்று இங்கு தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. மாறாக, அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நிலவிய இருள் சூழ்ந்த காலகட்டத்தைப் பற்றி கூறப்பட்டதாகும். அக்காலகட்டத்தில் முஸ்லிம்களிடத்தில் ஆன்மீக முன்னேற்றம் மற்றும் தர்பிய்யத்திற்கான எந்த பெரிய அளவிலான ஏற்பாடும் இல்லாதிருந்தது. ஆங்காங்கே முஜத்தித்துகள் (மார்க்க சீர்திருத்தவாதிகள்) இருந்து வந்தனர். அவர்கள் தத்தமது இடத்தில் பணி செய்து வந்தனர். அல்லது எவர்களிடத்தில் இதுவரை காலத்தின் இமாம் தோன்றி செய்தி சென்றடையாமல் இருந்தும் தங்களின் மறைவானவற்றின் மீதான ஈமானின் நிலைகளைப் பாதுகாத்துக் கொண்டார்களோ அவர்களைப் பற்றி கூறப்பட்டதாகும். மேலும் எவர்கள் மறைவானவற்றின் மீதான நம்பிக்கையைப் பாதுகாக்கின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்ற அடியாரை அடையாளம் கண்டு கொள்கின்றனர். ஏற்றுக் கொள்கின்றனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் எந்த அடையாளத்தையும் வேண்டவில்லை. மறைவானவற்றின் மீதான நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்களே அது உண்மை என்பதை அன்னாரின் வெளிப்படையான நிலையைக் கண்டு நம்பிக்கை கொண்டார்கள். அடுத்து தற்போது மீண்டும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையோடு அடையாளங்களின் காலகட்டம் ஆரம்பமாகி உள்ளது. அடையாளங்களின் காலகட்டம் ஆரம்பமாகும் என்ற முன்னறிவிப்பும் செய்யப்பட்டிருந்தது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த அடையாளங்களைக் கண்டு வருகிறது. மேலும் மறைவானவற்றின் மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் முன்னறிவிப்புகள் என்ற நம்பிக்கையில் நிலைநிற்கின்றது. நாம் நமது தொழுகைகளை அழகிய குரலில் தொழுது, அதில் நிலைபெற்று ஷய்த்தானின் தாக்குதல்கள் மற்றும் தீய எண்ணங்களை முறியடித்து விட வேண்டும். ஷய்த்தானின் எண்ணங்கள் ஒருபோதும் நமது உறுதிப்பாட்டை அசைக்க முடியாது. ஷய்த்தானிய சீடர்களின் முழு ஆற்றலும் தற்போது அஹ்மதிகளின் ஈமானில் பலவீனத்தை ஏற்படுத்துவதற்காக செலவிடப்படுகின்றது. ஆனால் நாம் அடையாளங்களை கண்முன் காணக்கூடிய நிலைகளை அடைந்து விட்டோம். சோதனையான காலம் உள்ளதென்றால் அதுவும் கூட திருக்குர்ஆனின் முன்னறிவிப்பிற்கேற்பதான். இறை அமைப்புகளுக்கு இதுபோன்ற சோதனை வரும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கிறான். மேலும் காலத்தின் இமாமும் நம்மை அதற்காக தயார்படுத்தியுள்ளார்கள். எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று ரமலானின் பரக்கத்துகளிலிருந்து பயன்பெறுவதற்கும் தொழுகை மற்றும் துஆவின் மூலமாக இறை நெருக்கத்தைப் பெறுவதற்கும் இந்நாட்களில் முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஈமானின் உறுதிப்பாட்டிற்காக துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் வாக்குறுதி விரைவில் நிறைவேற துஆவின் மூலமாக உதவியும் தேட வேண்டும். இந்த மாதம் துஆக்கள் (அதிகமாக) ஒப்புக்கொள்ளப்படுகின்ற மாதமாகும். இதில் நாம் துஆ செய்து கொண்டிருந்தால் நிச்சயமாக அவன் தனது வலுவான ஆற்றலுடன் அடையாளங்களின் ஒரு புதிய தொடர் மற்றும் காலகட்டத்தை ஆரம்பம் செய்து விடுவான். மேலும் திருக்குர்ஆன் போதனைகளின் முழு மகிமையுடன் உண்மையை நிலைநாட்டுகின்ற மற்றும் பொய் ஓடிவிடுகின்ற காட்சியை நமக்கு காட்டுவான். திருக்குர்ஆனின்

போதனைக்கேற்ப மக்களை நேர்வழியின் பக்கம் அழைக்கின்ற இக்காலத்தில் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை தொண்டர் மற்றும் இறைவன் புறமிருந்து தோன்றியவரின் அழைப்பை செவிமடுப்பதின் பக்கம் மக்கள் கவனம் செலுத்துவார்கள்.

இன்று திருக்குர்ஆனைப் பாதுகாக்க அல்லாஹ்வின் சார்பாக ஒருவர் நிற்கின்றார் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தான் ஆவார்கள். இன்று உலகில் ஒரு ஜமாஅத் அந்தப் பணியை அழகிய முறையில் செய்ய முடியும்; செய்து வருகின்றது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் தான் செய்து வருகிறது. இதற்காக நாம் முன்பை விட அதிகமாக உழைப்பது அவசியமாகும். இந்தப் பணிக்காக நாம் நமது துஆக்களில் தீவிரம் காட்டுவது அவசியமாகும். இல்லையென்றால் நாம் நமது கடமைகளில் தவறிழைத்தவர்களாகி விடுவோம். எனவே திருக்குர்ஆனின் போதனைகளின் செயல்வடிவமாக நாம் மாறுவதற்கு நமது ஆற்றலுக்கேற்ப முழுமையான முயற்சி செய்வது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

அல்லாஹ் குழப்பம் மற்றும் அபாயத்தின் காலகட்டத்திலும் கூட இஸ்லாத்தினை பாதுகாப்பான் என்ற வாக்குறுதி திருக்குர்ஆனில் உள்ளது. நாமே இவ்வேதத்தினை இறக்கியுள்ளோம். நாமே இதனை பாதுகாப்போம் என்றும் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான். எனவே அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப தனது வேதத்தினை பாதுகாக்க நான்கு வகையான ஏற்பாட்டினை செய்திருக்கின்றான்.

முதலாவதாக, ஹாஃபிஸ்கள் (திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள்) மூலமாக அதன் சொற்கள் மற்றும் வரிசை முறையை பாதுகாத்துள்ளான். அந்த தூய வேதத்தை தமது நெஞ்சங்களில் பாதுகாத்த இலட்சக்கணக்கான மக்களை ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஏற்படுத்தினான். அவர்களிடத்தில் ஒரு சொல்லைக் கேட்டால் அவர்களால் அதன் முன் பின் அனைத்து சொற்களையும் கூற முடியும். இவ்வாறாக சொற்கள மாற்றம் செய்யப்படுவதிலிருந்து எல்லா காலங்களிலும் பாதுகாத்து வந்துள்ளான்.

இரண்டாவதாக, ஒவ்வொரு நூற்றாண்டிலும் திருக்குர்ஆன் ஞானம் கிடைக்கப் பெற்ற அறிஞர்கள் மற்றும் மேதைகள் மூலமாக பாதுகாத்தான். அவர்கள் அவர்களின் திருக்குர்ஆனிற்கு நபிமொழியின் உதவியுடன் விளக்கவுரை செய்து இறைவனின் தூய வேதம் மற்றும் தூய போதனையின் பொருள் மாற்றம் செய்யப்படுவதிலிருந்து எல்லா காலகட்டத்திலும் பாதுகாத்தான்.

மூன்றாவதாக, முத்தகல்லிமீன்கள் மூலம், அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளை பகுத்தறிவிற்கேற்ப பொருத்திக்காட்டி, அறிவிப்பூர்வமான ஆதாரங்களைக் காட்டி இறைவனின் தூய வேதத்தை தீய எண்ணம் படைத்த தத்துவவாதிகளின் தத்துவங்களிலிருந்து பாதுகாத்தான்.

நான்காவதாக, ஆன்மீக அருள்பெறக் கூடியவர்கள் மூலம், அவர்கள் ஒவ்வொரு காலத்திலும் அற்புதங்கள் மற்றும் அடையாளங்களை நிராகரிக்கக் கூடிய மக்களின் தாக்குதல்களிலிருந்து திருக்குர்ஆனைப் பாதுகாத்தார்கள்.

நாமே இதனை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம் என்ற இறைவனின் வசனங்கள் தொடர்பான முன்னறிவிப்பு ஏதாவது ஒரு வழியில் எல்லா காலகட்டத்திலும் நிறைவேறி விடுகின்றது.

நாம் வசிக்கின்ற இந்தக் காலம் எப்படிப்பட்டதென்றால் எதிரிகள் நான்கு வகையான அம்சங்கள் மூலமாகவும் (திருக்குர்ஆன் மீது) தாக்குதல் செய்தார்கள். மேலும் இது மிகவும் கொடூரமான சூறாவளியின் நாட்களாகும். உலகில் திருக்குர்ஆன் பரவிய நாள் முதல் இதுபோன்ற கடினமான நாட்களை இஸ்லாம் சந்திக்கவில்லை. துர்பாக்கியம் கொண்ட குருடர்கள் திருக்குர்ஆனின் சொல்லின் தரம் மீது தாக்குதல் புரிந்துள்ளார்கள். தவறான மொழியாக்கம் மற்றும் விளக்கங்கள் செய்து விரிவுரை வெளியிட்டார்கள். கிறிஸ்தவர்கள் மற்றும் குறைமதி கொண்ட முஸ்லிம்கள் மொழியாக்கம் மற்றும் தஃப்ஸீர்கள் என்ற பெயரில்

திருக்குர்ஆனின் கூற்றுகளில் மாற்றம் செய்ய நாடினார்கள். மேலும் இதன் போதனை பலவந்தம் மற்றும் அநீதியின் வழிமுறைகளை கற்றுத் தருவதாக பழிசுமத்தினார்கள். மேலும் அதனுடைய பல்வேறு கூற்றுகள் இறைபண்புகள் மற்றும் இயற்கை சட்டத்திற்கு எதிரானது என்றும் கூறி தாக்குதல் செய்தார்கள். மேலும் பல்வேறு பாதிரிமார்கள் மற்றும் ஆரியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் மற்றும் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளை மிக கீழான நடைமுறையின் மூலமாக நிராகரித்தார்கள். மேலும் உண்மையை அறிய விரும்புபவர்கள் வெறுக்கின்ற அளவிற்கு இறைவனின் தூய வேதம், இஸ்லாமிய மார்க்கம் மற்றும் நமது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்கள் மீது இட்டுக்கட்டிப் பொய்யான தோற்றத்தை உருவாக்கினார்கள். எனவே அந்த சமயத்தில்தான் 14வது நூற்றாண்டு ஆரம்பமானது. நாமே இதனை இறக்கினோம்; நாமே இதனை பாதுகாப்போம் என்ற தனது வாக்குறுதிக்கேற்ப இறைவன் 14வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு முஜத்தித்தை (மார்க்கசீர்திருத்தவாதியை) இந்தக் குழப்பங்களை எல்லாம் அகற்ற அனுப்பினான். ஒவ்வொரு மார்க்க சீர்திருத்தவாதிக்கும் அல்லாஹ்விடத்தில் ஒரு சிறப்பான பெயர் உள்ளது. எவ்வாறு ஒரு மனிதர் புத்தகம் எழுதும் போது அந்த புத்தகத்திற்கேற்ப அதற்கு பெயர்சூட்டுகின்றாரோ அதேபோன்று இறைவனும் அந்த மார்க்க சீர்திருத்தவாதியின் தொண்டுகளுக்கேற்ப மஸீஹ் என்று பெயர் வைத்தான். ஏனென்றால் இறுதிக்காலத்தில் தோன்றும் சிலுவை குழப்பங்களை மஸீஹே தீர்ப்பார் என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட விஷயமாகும். எனவே எந்த மனிதரிடம் இந்த சீர்திருத்தப் பணி ஒப்படைக்கப்பட்டதோ அவரது பெயர் மஸீஹ் மற்றும் மஹ்தி என வைப்பது அவசியமானதாக இருந்தது.

எனவே சிலுவையை முறிக்கும் பணி யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என சிந்தியுங்கள். அந்த காலம் இதுதானா அல்லது வேறு எதுவுமா? அந்த நபர் நானா அல்லது வேறு யாருமா? என சிந்தியுங்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இன்று Church செய்திருக்கின்ற ஆட்சேபனைகள் அனைத்தும் பழைய ஆட்சேபனைகளே ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஆட்சேபனைகளைப் பற்றி தனது மேற்கோளில் குறிப்பிட்டுள்ளார்கள். நான் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிரில் எவராலும் நிற்க முடியவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகத்துவமிக்க இந்த பணியைக் கண்டு சில முஸ்லிம் தலைவர்கள் கூட புகழ்ந்து கூறியுள்ளார்கள். ஆனால் பரிதாபம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தப் பணிகளைக் கண்டு முஸ்லிம்கள் அன்னாருக்கு அருகில் ஒன்றுகூடவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூட, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றியவுடன் எனது ஸலாத்தை எட்ட வையுங்கள் என்ற கட்டளையையும் வழங்கியுள்ளார்கள். ஆனால் இதன் பின்னரும் பெரும்பான்மை எதிர்ப்பில் இறங்கி விட்டது. இவை அனைத்தும் மறைவானவற்றின் மீதான நம்பிக்கைக்கு எதிரானதாகும். இந்த எதிர்ப்பு தீவிரவாதம் மற்றும் அநீதியான அரசாங்கங்களின் காரணமாக மேலும் தீவிரமாகி வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை தொண்டர் மற்றும் திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்காக அல்லாஹ்வின் சார்பாக அனுப்பப்பட்டுள்ளவரின் தூதுச் செய்தியை செவிமடுத்து அவரின் உதவியாளராக ஆவதற்கு முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அறிவினை வழங்குவானாக! அல்லாஹ் நமக்கும் பாக்கியத்தை வழங்குவானாக! நாம் நமது அனைத்து ஆற்றல்களுடன் அல்லாஹ்வின் பயில்வானுக்கு உதவியாளராக திகழ்வோமாக! மேலும் திருக்குர்ஆனின் போதனைகளை நாம் உலகில் பரப்புகின்றவர்களாக ஆவோமாக! ஆமீன்.

நான் எதிரிகளைப் பற்றி கூறியிருந்தேன். இன்று மீண்டும் இந்த கொடூரமான அநீதியாளர்களின் அநீதியான செய்திகள் உள்ளன. இந்த வாரத்தில் சிந்து மாநிலத்தில் இரண்டு ஷஹாதத்துகள் நடைபெற்றுள்ளன. ஒன்று, கராச்சியிலும் மற்றொன்று சாங்கட்டிலும் நடைபெற்றுள்ளது. அநீதியின் விளைவாக இறை நியதி எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதனை இம்மக்கள் பார்ப்பதில்லை! நமது தவறுகளின் விளைவாக நம்மீது அழிவு வருகின்றது என்று அவர்களில் பலர் கூறுகின்றனர்; எழுதுகின்றனர்.

ஆனால் தமது தவறுகளை தவறான வழியின் அடையாளம் காண்கின்றனர். இவர்களின் கண்களில் திரை எந்த அளவுக்கு விழுந்து விட்டது என்றால், ஓரிடத்தில் தீய இயல்பு கொண்ட ஒரு முல்லா இவ்வாறு பயான் செய்துள்ளார்.

நாம் காதியானிகளை உலகிலிருந்து அழிப்பதற்கு முழுமையான முயற்சி செய்யவில்லை. எனவே தான் அஸாப் (அழிவு) நம்மீது வந்துள்ளது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அஹ்மதிகள் இன்ஷா அல்லாஹ் இந்த சோதனையிலிருந்து கடந்து விடுவார்கள். ஆனால் இறைவன் மற்றும் இறைதூதரின் பெயரால் அநீதியான போதனைகளை வழங்குகின்ற திருக்குர்ஆனின் போதனைகளை அவமதிக்கும் தீய இயல்பு கொண்ட முல்லாக்களே! நீங்கள் கண்டிப்பாக இறைவனின் பிடியின் கீழ் வருவீர்கள். நான் சில சமயத்தில் முல்லாக்களை குறிப்பிட்டுப் பேசும் போது அவர்கள் மேலும் கொந்தளிக்கின்றனர். எனவே நான் பேசக்கூடாது என நம்மவர்களில் சிலரின் தப்பெண்ணமாகும். எனவே நான் நம்மவர்களுக்கு அதனை புரிய வைக்க விரும்புகின்றேன். நான் கூறுவதற்கும், கூறாமல் இருப்பதற்கும் பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக என்ன என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் தீட்டியுள்ள பயங்கரமான சதித்திட்டங்களில் எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. தீய மக்களைப் பற்றி சமுதாயத்திற்கு விழிப்பூட்டுவதற்கு நல்லியல்பு படைத்த எவருக்காவது என் கூற்று உதவியாக இருக்கும் என்பதற்காகவே நான் இவ்வாறு கூறுகின்றேன்.

எவ்வாறிருப்பினும் நமது பணி பொறுமை, உறுதிப்பாடு மற்றும் துஆவின் மூலமாக நமது இலக்கை நோக்கி பயணிப்பது ஆகும். இன்ஷா அல்லாஹ் நாம் இதனை செய்து கொண்டிருப்போம். அஹ்மதிகள் இந்நாட்களில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அவனுக்காகவே ஆனவாறு சிரம் தாழ்த்துங்கள். அல்லாஹ் எதிரிகளின் எல்லா தீங்கிளையும் அவர்கள் பக்கமே திருப்புவானாக! மேலும் ஒவ்வொரு அஹ்மதியையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக! மேலும் நாம் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வோமாக! நான் குறிப்பிட்ட ஷஹீதுகளில் ஒருவர் கராச்சியைச் சேர்ந்த டாக்டர் நஜ்முல் ஹஸன் சாஹிப் ஆவார்கள். ஆகஸ்ட் 16 ம் தேதி இரவு சுமார் 11.30 மணி அளவில் தம்முடைய கிளினிக்கிலிருந்து வீடு திரும்புவதற்கு வண்டியில் அமரும் போது அடையாளம் தெரியாத நபர் ஒருவன் அவர் மீது துப்பாக்கி சூடு செய்து விட்டான். அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால், காயமடைந்த நிலையிலேயே ஷஹீதாகி விட்டார்கள். அவரின் மார்பில் 13 குண்டுகள் பாய்ந்திருந்ததாக கூறப்படுகின்றது. டாக்டர் நஜ்முல் ஹஸன் சாஹிப் ஷஹீது அவர்களின் முன்னோர்கள் பீகார் மாநிலம் பாஹல்பூரைச் சார்ந்தவர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் மஹ்மூத் ஆலம் சாஹிப் பாஹல்பூரிலிருந்து காதியான் சென்று பைஅத் செய்யும் பாக்கியம் பெற்றார்கள். அன்னார் மூலமாகவே அஹ்மதிய்யத் பாஹல்பூரில் பரவியது. டாக்டர் சாஹிபின் தாத்தா மக்துமுல் ஹஸன் சாஹிப் மற்றும் மவ்லவி அப்துல் மஜீத் சாஹிப் பாஹல்பூரி இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். 1956 -ல் இவர்களின் குடும்பம் பாஹல்பூரிலிருந்து ஹிஜ்ரத் செய்து டாக்கா வந்தது. 1971 -ல் பங்களாதேஷ் உருவான போது டாக்டர் சாஹிப் பெற்றோர்கள் ஹிஜ்ரத் செய்து சில ஆண்டுகள் இந்தியா மற்றும் நேபாளில் வசித்தார்கள். 1975 -ல் மீண்டும் கராச்சி வந்து விட்டார்கள். டாக்டர் நஜ்முல் ஹஸன் சாஹிப் 1971 -ல் டாக்காவில் பிறந்தார்கள். அன்னாருக்கு 7 சகோதரர்கள் மற்றும் 1 சகோதரி உள்ளனர். கராச்சியில் தான் தொடக்கக்கல்வி கற்றார்கள். சிந்து மாநில மெடிக்கல் காலேஜில் M.B.B.S. படித்தார்கள். அதற்கான பயிற்சியும் செய்து வந்தார்கள். வழக்கம்போல் கிளினிக்கிலிருந்து வீட்டிற்கு செல்வதற்கு வண்டியை Start செய்தார்கள். அப்போது அடையாளம் தெரியாத ஒருவன் சுட்டு விட்டான். டாக்டர் சாஹிபின் வயது 39½ ஆகும். பல நாட்களாக டாக்டர் சாஹிபின் மாமனார் கிளினிக்கை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கூறி வந்தார்கள். ஆனால் டாக்டர் சாஹிப் அவர்கள் நான் இப்பகுதியிலிருந்துதான் வளர்ந்து பெரியவனானேன். எனவே இப்பகுதி மக்களுக்கு தொண்டு செய்வது எனது கடமையாகும் என்று கூறி மறுத்து விட்டார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா முகாம்களிலும் தொண்டாற்றி வந்தார். அவர் ஒருபோதும் தான் அஹ்மதி என்பதை எவரிடத்திலும் மறைக்கவில்லை. மிகவும் தைரியசாலி ஆவார். மிகவும் உருக்கத்துடன் தொழக் கூடியவர்.

சந்தாக்கள் தொடர்ந்து சரியாக கொடுத்து பெரிய பட்ஜெட்களில் பங்குபெறக் கூடியவர். அவருக்கு ஒரு மனைவி மற்றும் 3 பிள்ளைகள் உள்ளனர். மூன்று பிள்ளைகளுமே வக்ஃபே நவ் குழந்தைகள் ஆவர். பெண் குழந்தையின் பெயர் ஷாஃபியா ஹஸன். அவரது வயது 5. இரண்டாவதாக ஆண் குழந்தையின் பெயர் முஹம்மது ஹஸன். அவரது 2 வயது. மூன்றாவதாக ஒரு பெண் குழந்தையின் பெயர் மல்லிகா ஹஸன். அவர் பிறந்து இரண்டரை மாதங்கள் ஆகின்றன.

இரண்டாவது ஷஹாதத் மதிப்பிற்குரிய ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் சாங்கட் அவர்களுடையதாகும். அன்னார் குஜராத் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 1950 -ல் ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் பிறந்தார்கள். மேலும் ரப்வாவில் அவர்கள் கல்வி கற்றார்கள். ரப்வாவில் கல்வி பயிலும் போது என்னுடன் தான் படித்தார்கள். மிகவும் நகைச்சுவை இயல்பு கொண்டவர். நல்ல தூய சபையில் அமரக்கூடியவர். 19.08.2010 அன்று காலை 10.15 மணி அளவில் அன்னார் தமது வீட்டிலிருந்து வயலின் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் மோட்டார் சைக்கிளில் முகமுடி அணிந்து வந்த இரண்டு நபர்கள் சுட்டதில் அன்னாரின் கழுத்தில் குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். அன்னாரின் வயது 60 ஆகும். பல ஜமாஅத் பொறுப்புகளை வகித்துள்ளார்கள். பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார்கள். 2006 -ல் அன்னாரின் சகோதரர் முஜிபுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். அதன் பிறகு வயது முதிர்ந்த பெற்றோரை கவனிக்கவே அன்னார் அமெரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்தார். மதிப்பிற்குரிய ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் ஷஹீத் தொழுகையாளி ஆவார். தவறாமல் சந்தாக்கள் செலுத்துபவராக இருந்தார். கிலாஃபத்தோடு மிகுந்த பற்றுள்ளவர். ஏழைகளின் துன்பங்களில் பங்குபெறக் கூடியவர். அல்லாஹ் அன்னாரின் உறவினர்கள் அனைவருக்கும் பொறுமையினை வழங்குவானாக! மறுமையில் அல்லாஹ் அன்னாரின் நிலைகளை உயர்த்துவானாக! அடுத்து 5.08.10 அன்று மரணமடைந்த மூஸா முஸ்தானி சாஹிப் ஆவார்கள். அவருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்து விட்டேன். அவர் ஒரு மிகவும் நல்ல நண்பர் ஆவார். எனவே அவரைப் பற்றி இங்கு சில விஷயங்களை கூற விரும்புகிறேன். பத்து ஆண்டுகள் வரை ஜமாஅத்தின் சதர் ஆக இருந்தார்கள். தப்லீகில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். மிக ஆர்வத்துடன் ஜமாஅத் பணிகளைச் செய்து வந்தார்கள். ஜமாஅத் பணத்தை மிக கவனமாக செலவிட்டு வந்தார்கள். கிலாஃபத்தோடு மிகவும் பற்று கொண்டவர். திடீரென்று நோய்வாய்ப்பட்டதால் வஃபாத் ஆகி விட்டார்கள். வயது ஒன்றும் அதிகமல்ல. அல்லாஹ் மறுமையில் அன்னாரை நிலைகளை உயர்த்துவானாக! அன்னாரோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! அல்லாஹ் அவரைப் போன்ற – அவரை விட சிறந்த தொண்டு செய்யும் நபர்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு எல்லா இடங்களிலும் தந்தருள்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON ON 20.08.2010**

Translated by : **Maulavi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**